**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

**CC No. 196/2017** **Date : 17/03 /2023**

**PW**16 (**ராமலிங்கம் த/பெ.பச்சைமுத்து) குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**(எதிரி ஆஜர்).**

24. பொதுவாக வங்கிக்கு தேவையான ரசீதுகளை கூட்டுறவு அச்சகத்தில் நாங்கள் அச்சு செய்வோம் என்றால் சரிதான். எந்த வரிசை எண்ணிலிருந்து எந்த வரிசை எண் வரை கூட்டுறவு சங்கத்திற்கு அச்சு செய்து கொடுப்பது என எவ்வாறு தெரியும் என்றால் அந்த அந்த கூட்டுறவு சங்கங்கள் தனிப்பட்ட முறையில் அச்சடித்து கொள்வார்கள். 2001 ம் ஆண்டு பெரம்பலூரில் கூட்டுறவு அச்சகம் இருந்ததா என்றால் எனக்கு நினைவில்லை. கூட்டுறவு சங்கங்களில் பராமரிக்கப்படும் ரசீதுகள் ஒரே வடிவத்தில் சங்கதிகள் அடங்கி பராமரிக்க வேண்டும் என சுற்றிக்கை ஏதும் உள்ளதா என்றால் எனக்கு அது பற்றி தெரியவில்லை. ஆனால், கூட்டுறவு அச்சகத்தில் ஒரே மாதிரியான ரசீதுகளை தான் அனைத்து சங்கங்களுக்கும் அடித்து கொடுப்பார்கள். ஒவ்வொரு சங்கத்திற்கும் தனித்தனியான வரிசை எண்கள் கொடுத்து ரசீதுகளை வழங்குவார்கள். நான் எனது விசாரணையின் போது இந்த சங்கத்தில் எந்த கால கட்டத்தில் ரசீது புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டது என்றும், எந்த வரிசை எண்ணிலிருந்து எந்த வரிசை வரை எத்தனை புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டது என்றும், நான் எனது விசாரணையில் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. இனம் 2 ல் 1-வதாக குறிப்பிடப்பட்டுள்ள ரசீது புத்தகம் 1101 முதல் 1200 வரை வரிசையிலான ரசீதுகள் அந்த சங்கத்தில் புழக்கத்தில் இருந்தது. அதை நான் பார்த்துள்ளேன். 12.06.2001 தேதியிட்ட ரசீது எண் 1302 என்பது அந்த சங்கத்தில் புழக்கத்தில் இல்லை எனவும் நான் அந்த விசாரணையில் தெரிந்து கொண்டேன். எந்த ரசீது

புத்தகம் எந்த தேதியில் பயன்பாட்டிற்காக எடுக்கப்பட்டது என பதிவேடுகள் பராமரிப்பார்கள் என்றால் சரிதான். அத்தகைய பதிவேடுகள் எதையும் நான் கைப்பற்றி எனது விசாரணையின் போது விசாரணை செய்தேனா என்றால் நினைவில்லை. அத்தகைய பதிவேடுகளை கைப்பற்றி நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யாத பட்சத்தில் இந்த இனத்தில் குறிப்பிடப்படும் ரசீதுகள் அந்த காலகட்டத்தில் பயன்படுத்தப்பட்டது என கூற முடியாது என்றால் சரிதான். ரசீது புத்தகத்தை பராமரிக்கும் பொறுப்பு அந்த பிரிவு எழுத்தருக்கு தான் உண்டு என்றால் சரிதான். ஆனால், ஒட்டு மொத்த பொறுப்பு செயலாளருக்கு தான் உண்டு. மேலும், எனது விசாரணையின் போது மொத்தம் இத்தனை புத்தகங்கள் அச்சிடப்பட்டது என்றும், அதில் இத்தனை புத்தங்கள் பயன்படுத்தப்பட்டது என்றும், மீதி புத்தகங்கள் எத்தனை பயன்படுத்தப்படாமல் இருப்பில் இருந்தது என்றும், நான் தெரிந்து கொண்டேனா என்று நினைவில்லை. இது சம்மந்தமான குறிப்புகள் எதையும் நான் எனது விசாரணை அறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

25. **இனம் 2-ல் 1-வதாக** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1302 என்பதை மலர் செல்வி ஒப்படைத்தார். அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. ஏனென்றால் நான் கைப்பற்றியதை எனது விசாரணை அறிக்கையுடன் துணை பதிவாளரிடம் சமர்பித்து விட்டேன். விசாரணை அறிக்கையுடன் ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த மலர்செல்வி தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் சரிதான். ரசீது எண்.1302 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.69 தினப்பேரேடு மற்றும் அ.சா.ஆ.68 காசுகடன் பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1302 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் உறுதிப்படுத்தவில்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி

இருக்கும். இந்த ரசீது எண்.1302 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1302 என்பது 12.06.2001 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 12.06.2001 காலகட்டத்தில் ரசீது எண்கள் 1101 முதல் 1200 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

26. **<u>இனம் 2-ல் 2-வதாக</u>** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1304 என்பதை போர்மன்னன் ஒப்படைத்தாரா என எனக்கு நினைவில்லை. அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த போர்மன்னன் தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் சரிதான். ரசீது எண்.1304 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.71 தினப்பேரேடு மற்றும் அ.சா.ஆ.70 காசுகடன் பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1304 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1304 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1304 என்பது 12.07.2001 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 12.07.2001 காலகட்டத்தில் ரசீது எண்கள் 1200

முதல் 1299 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

27. **<u>இனம் 2-ல் 3-வதாக</u>** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1308 என்பதை பூங்கோதை ஒப்படைத்தாரா என எனக்கு நினைவில்லை. ஆனால், அதன் அடிக்கட்டையை நான் கைப்பற்றியுள்ளேன். அந்த அடிக்கட்டை இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து துணைபதிவாளரிடம் சமர்பித்திருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த ரசீது சம்மந்தமாக வங்கியின் கடன் பதிவேடு மற்றும் தினப்பதிவேடுகளில் பதிவுகள் ஏதேனும் உள்ளதா என நான் சரிபார்த்தேனா என்றால் சரிபார்த்தேன். அப்போது எனக்கு அன்றைய தினம் ஞாயிற்றுகிழமை என எனக்கு தெரிய வந்தது. அதற்கு அடுத்த தேதிக்குண்டான கடன் பதிவேட்டை அல்லது தினப்பேரேட்டையோ கைப்பற்றி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அனைத்து ஆவணங்களையும் கைப்பற்றி துணைபதிவாளரிடம் ஒப்படைத்துள்ளேன். இந்த பூங்கோதை தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் சரிதான். ரசீது எண்.1308 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1308 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1308 என்பது 31.03.2002 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 31.03.2002 காலகட்டத்தில் எந்த வரிசையிலான புழக்கத்தில் இருந்தது என்றால் தற்போது

எனக்கு தெரியவில்லை. மீண்டும் சாட்சி அந்த காலகட்டத்தில் 1635 முதல் 1639 வரை புழக்கத்தில் இருந்ததாக கூறுகிறார். அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன். இந்த பூங்கோதை தான் வாங்கிய கடனை தன் கணவர் அருணாச்சலம் என்பவர் செலுத்தியதாக கூறியுள்ளாரா என்றால் அருணாச்சலத்தின் அண்ணன் சாந்தப்பன் செலுத்தியதாக கூறியுள்ளார். ரசீது எண்.1308 ல் பணம் செலுத்துபவரின் கையொப்பம் யாருடையது என நான் பார்த்தேனா என்று நினைவில்லை.

28. **<u>இனம் 2-ல் 4-வதாக</u>** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1406 என்பதை அண்ணாமலை ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்தார். அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. ரசீது எண்.1406 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.77 தினப்பேரேடு மற்றும் அ.சா.ஆ.78 காசுகடன் பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1406-ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1406 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1406 என்பது 30.08.2001 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 30.08.2001 காலகட்டத்தில்

ரசீது எண்கள் 1200 முதல் 1299 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

29. **இனம் 2-ல் 5-வதாக** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1407 என்பதை ராமசாமி ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்துள்ளார். அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த ராமசாமி தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் நினைவில்லை. ரசீது எண்.1407 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.74 தினப்பேரேடு மற்றும் அ.சா.ஆ.75 காசுகடன் பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1407 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1407 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1407 என்பது 30.06.2001 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 30.06.2001 காலகட்டத்தில் ரசீது எண்கள் 1200 முதல் 1299 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை

ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

30. **இனம் 2-ல் 6-வதாக** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1405 என்பதை பாலகிருஷ்ணன் ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்துள்ளார். அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த பாலகிருஷ்ணன் தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் நினைவில்லை. ரசீது எண்.1405 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.76 பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1405 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1405 அடங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1405 என்பது 06.08.2001 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 06.08.2001 காலகட்டத்தில் ரசீது எண்கள் 1200 முதல் 1299 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

31. **<u>இனம் 2-ல் 7-வதாக</u>** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1408 என்பதை மாணிக்கம் ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்துள்ளார். அந்த ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த மாணிக்கம் தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் நினைவில்லை. ரசீது எண்.1408 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.77 கடன் பதிவேடு மற்றும் அ.சா.ஆ.78 தினப்பேரேடு பதிவேடுகளில் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1408 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1408 டங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.<u>1408</u> என்பது <u>29.01.2002</u> தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 29.01.2002 காலகட்டத்தில் ரசீது எண்கள் <u>1500 முதல் 1599</u> வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

32. **<u>இனம் 2-ல் 8-வதாக</u>** நான் எனது விசாரணையின் போது ரசீது எண் 1409 என்பதை பூராசாமி ஒப்படைத்தாரா என்றால் ஒப்படைத்துள்ளார். அந்த ரசீது இந்த வழக்கில்

CWM

தாக்கல் செய்யப்பட்டதா என்றால் எனக்கு தெரியவில்லை. விசாரணை அறிக்கையுடன் நான் கைப்பற்றிய ஆவணப்பட்டியலையும் நான் இணைத்து இருந்தேன். ஆனால், அந்த பட்டியல் தற்போது இல்லை. இந்த பூராசாமி தான் நான் கடன் தொகையை பெறவில்லை என கூறியுள்ளார் என்றால் நினைவில்லை. ரசீது எண்.1409 யை பூர்த்தி செய்த நபரின் கையெழுத்து யாருடையது என எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என நினைவில்லை. அது பற்றிய குறிப்பும் எனது அறிக்கையில் இல்லை. அ.சா.ஆ.79 ரொக்கபுத்தகத்தின் பக்கம் எண்.176 ல் உள்ள கையெழுத்தின் வகையும் ரசீது எண்.1409 ல் பூர்த்தி செய்யப்பட்ட கையெழுத்தின் வகையும் ஒன்று தானா என எனது விசாரணையில் நான் பார்த்தேன். ஆனால், பார்த்தற்கான குறிப்பு எனது அறிக்கையில் இல்லை. ஒவ்வொரு ரசீது புத்தகத்திலும் 100 ரசீதுகள்(1+1) அடங்கி இருக்கும். இந்த ரசீது எண்.1409 டங்கிய ரசீது புத்தகத்தை நான் கைப்பற்றினேனா என்றால் தற்போது எனக்கு நினைவில்லை. நான் அப்படி ஒரு ரசீது புத்தகத்தை கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இந்த ரசீது எண்.1409 என்பது 30.03.2002 தேதியிடப்பட்டது என்றால் சரிதான். 30.03.2002 காலகட்டத்தில் ரசீது எண்கள் 1500 முதல் 1599 வரையிலான புத்தகம் புழக்கத்தில் இருந்தது. அந்த புத்தகம் தான் புழக்கத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஏதேனும் சான்றிதழ் அல்லது அந்த புத்தகத்தின் அடிக்கட்டை ஏதேனும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. ஆனால், துணை பதிவாளரிடம் நான் சமர்பித்துள்ளேன்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Perambalur.

Judis